**தலைப்பு – 126 கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

---

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 212 | பரீட்சைகள் திணைக்களம் |
| 213 | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| - | இலங்கை தேசிய நூல் வெளியீட்டுச் சபையின் கலைத்தல் நிதிக்கூற்றுக்கள் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

அமைச்சினதும் மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திணைக்களங்களினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் திணைக்களங்களின் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த

பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **திணைக்களப் பெயர்** | **முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 126 | கல்வி அமைச்சு | 2015 செப்தெம்பர் 25 |
| 212 | பரீட்சைகள் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 21 |
| 213 | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 21 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வணிக முற்பணக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 44,046 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 43,510 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 31 மில்லியன் முதல் ரூபா 447 மில்லியன் வரையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 1.08 சதவீதத்திலிருந்து 28.18 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 126 | 41,231 | 40,784 | 447 | 1.08 |
| 212 | 2,705 | 2,647 | 58 | 2.14 |
| 213 | 110 | 79 | 31 | 28.18 |
| மொத்தம் | **44,046** | **43,510** | **536** | 1.22 |

#### (ஆ) வேறு அமைச்சு மற்றும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் பயன்பாடு

வேறுபட்ட செயற்பாடுகளுக்காக கல்வி அமைச்சால் ரூபா 10.6 மில்லியன் நிதிஏற்பாடு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 8.6 மில்லியன் அளவில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள பரீட்சைகள் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது ஒரு வருமானக் குறியீட்டின் ரூபா 200 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 229.4 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 114.7 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20.03.02.13 | 200 | 229.4 | 29.4 | 14.7 |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12601 | 820.0 | 800.7 | 675.0 | 678.7 | 2,500.0 | 1,548.0 |
| 21201 | 18.0 | 17.6 | 13.0 | 16.2 | 100.0 | 70.9 |
| 21301 | 5.5 | 5.2 | 4.0 | 6.5 | 37.0 | 17.2 |

**2.3.2 வியாபார முற்பணக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றினால் 01 வியாபார முற்பணக் கணக்கு பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்திற்குரிய வியாபார முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 21302 | 2,900 | 2,724 | 2,500 | 2,781.4 | 4,000 | 910.4 | 2,250 | 2,181 |

**(ஆ) நிதி விளைவு**

வியாபார முற்பணக் கணக்கின் நிதி விளைவு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விடய இல. | முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் | நிதி விளைவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2014 | | 2013 | |
| | | இலாபம் பிற்போடற் கட்டணம் தவிர்ந்த | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் | இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 21302 | புத்தகங்கள் அச்சிடல், பிரசாரம் மற்றும் விற்பனை | 262.6 | (665.7) | 1,394.7 | 433.0 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 124.3 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களங்கள் | கட்டுநிதிக் கணக்கு இல | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| கல்வி அமைச்சு | 7002/0000/00/0254/0014/000 | 2.0 |
| கல்வி அமைச்சு | 7003/0000/00/0013/0014/000 | 0.4 |
| பரீட்சைகள் திணைக்களம் | 7002/0000/00/0055/0014/000 | 22.8 |
| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 7002/0000/00/0172/0014/000 | 99.1 |
| மொத்தம் | | 124.3 |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 929.9 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| கல்வி அமைச்சு | 6000/0000/00/0006/0064/000 | 0.3 |
| கல்வி அமைச்சு | 6000/0000/00/0015/0039/000 | 833.2 |
| கல்வி அமைச்சு | 6000/0000/00/0015/0177/000 | 0.2 |
| பரீட்சைகள் திணைக்களம் | 6000/0000/00/0006/0066/000 | 3.9 |
| பரீட்சைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0094/000 | 84.3 |
| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0095/000 | 8.0 |
| மொத்தம் | | 929.9 |

**2.6 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வியாபார முற்பணக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. தலைப்பு 126 – கல்வி அமைச்சு**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| வாகனம் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் வகுப்பிற்குள் உள்ளடக்கப்பட வேண்டிய மாணவர்களின் ஆகக்கூடிய

எல்லையினை விஞ்சி 20 தேசிய பாடசாலைகளுக்கு முதலாம் தரம் மற்றும் இடையிலுள்ள வகுப்புக்களுக்காக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 5,191 மாணவர்கள், 3,714 மாணவர்கள் மற்றும் 424 மாணவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். அந்த மாணவர்களை உள்வாங்குதல் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என பரீட்சிப்பதற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகளை உள்ளடக்கிய கோவைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 63 தேசிய பாடசாலைகளிலிருந்து கோரப்பட்ட 2014 இன் வருடாந்த கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 26 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 செப்தெம்பர் 14 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,940,046 ஆகக் காணப்பட்டது.

### 3.4 முறையற்ற கொடுப்பனவுகள்

2014 ஆம் ஆண்டின்போது தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் அமைச்சிற்கு ரூபா 3,000,000 தொகைக்கு அல்லது அதற்குக் குறைந்த பெறுமதிக்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் இதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் நிதியேற்பாடு ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி தேசிய பாதீட்டுத் திணைக்களம் விதித்த நிதி எல்லையினை விஞ்சி ரூபா 3,187,991 தொகையில் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான நிலையான கட்டளையின் அடிப்படையில் வங்கிக் கணக்கிலிருந்து நிதி செலவிடப்பட்டிருந்தது. இந்தக் கொடுப்பனவுகள் முறையான பிரகாரம் கணக்கீடு செய்யப்படாமையினால் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத கொடுப்பனவுகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 3.5 ஒதுக்கீட்டுக் கணக்கு

------------------------------------

**பாதீட்டு முரண்கள்**

--------------------------------------

நாளதுவரையாக தேவையான நடவடிக்கை எடுக்காமை, முறையாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் போதியளவில் கட்டுநிதி கிடைக்காமை போன்ற விடயங்களின் காரணமாக ரூபா 376,445,247 தொகையான மூலதன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பில் 06 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 36,681,000 தொகையான நிதியேற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 03 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 15,850,533 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 47 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.6 கட்டுநிதிக் கணக்கு

----------------------------------

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 14 தேசிய பாடசாலைகளினால் 133 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 1,971,208 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருகக்வில்லை.

### 3.7 பொது வைப்புக் கணக்கு

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் பேணப்பட்ட மூன்று வைப்புக் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 833,611,495 ஆக இருந்தது. அந்த 03 கணக்குகளுக்குரிய ரூபா 52,231,015 கூட்டுத்தொகையான காலாவதியான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 664,565 தொகை அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் பணம் அந்தந்த மாகாண கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கல்விக் கல்லூரிகளின் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) 2006 யூன் 20 ஆந் திகதிய 2006/27 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தியின் படி 5 ஆம் தரத்திலுள்ள புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக மாதந்தோரும் அனுப்பப்படுகின்ற மாணவர் உதவுதொகை உரிய வலயக்கல்வி அலுவலகங்களுக்கு கிடைத்த பின்னர் அந்த மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் உரிய மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வலயக்கல்வி அலுவலகங்களுக்குக் கிடைத்த ரூபா 1,734,235 கூட்டுத் தொகையான மாணவர் உதவி, புலமைப்பரிசில் பெறுனர்களின் கணக்குகளில் வைப்புச் செய்யப்படாது அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கானன முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

12601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந்திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வரவு மீதியில் ரூபா 4,303,692 கூட்டுத்தொகையானது கணக்கீட்டு வழுவின் காரணமாக தோற்றம் பெற்ற மீதியாகும். அதில் ரூபா 2,048,694 கூட்டுத்தொகையானது 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும்,

ரூபா 2,254,998 கூட்டுத்தொகையானது 1 வருடம் முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் இருந்து வருகின்றது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த வழுக்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் மீதிக்கும் இடையே ரூபா 2,602,735 இனங்காணப்படாத வேறுபாடு காணப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவீடுகள் முழுமையாக நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 127,929,636 ஆக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த கடன் மீதியை அறவிடுவதற்கு போதியளவானதும் முறையானதுமான திட்டடொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதனிடையே ரூபா 128,150 தொகையான ஆதனக் கடன் மீதிக்குரிய பிணை உறுதி தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் அதனிடையே இடமாற்றலாகிச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்தும், 14 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 2,180,908 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்பான தகவல்கள் எதுவும் அமைச்சில் காணப்படாமையினால் அந்தக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

**3.9 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் 03 உதவிச் செயற்திட்டங்களில் ரூபா 6,225 மில்லியன் தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சுக்குச் சொந்தமான 20 மோட்டார் வாகனங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

-----------------------------------------------------------------------------------

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு 2015 மே 31 ஆந் திகதி வரையில் 146 தேசிய பாடசாலைகளுக்கும் 03 கல்விக் கல்லூரிகளுக்கும் உரிய அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------

அமைச்சினால் பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின் படி, அமைச்சிற்குச் சொந்தமான 04 வாகனங்கள் கல்வி இராஜாங்க அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம் என்பவற்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் வாகனங்களின் உரித்தை அந்த நிறுவனங்களுக்குக் கையளித்து நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

பாதுகாப்புச் சேவைக் கல்லூரிக்குத் தேவையான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,191,970,840 தொகையான நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி ரூபா 1,098,236,071 தொகை செலவில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 1.9329 ஹெக்டேயர் காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் சட்டரீதியான உரித்தை கல்வி அமைச்சிற்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 இணக்கமின்மைகள்

---

(அ) **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| ❖ தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | - | 2014 ஆம் ஆண்டின் போதும் அதற்கு முன்னைய ஆண்டு காலப்பகுதியின் போதும் 151 தேசிய பாடசாலைகளில் 724 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி அங்கத்தவர்கள் 12,093 நாட்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தனர். அந்தக் காலத்திற்குரிய சம்பளம் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| ❖ தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | தாபன விதிக் கோவையின் படி லீவுகளுக்காக முறையான அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் 2014 ஆம் ஆண்டின் போதும் அதற்கு முன்னைய காலத்தின் போதும் 42 தேசிய பாடசாலைகளில் 348 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி அங்கத்தவர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்த விடுமுறை தினங்களின் எண்ணிக்கை 5,744 ஆகும். |
| ❖ தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | 02 ஆசிரியர் கலாசாலைகளின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வாழ்ந்து வருகின்ற 04 உத்தியோத்தர்களிடமிருந்து நீர் மாற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன் ஆசிரியர் கலாசாலையில் சேவையாற்றுகின்ற கல்விசார் பதவியணியினர் அங்கத்தவரொருவருக்கு உத்தியோகபூர்வ வீடல்லாத எனினும் சுற்றாடலில் வேறொரு கட்டிடத்தில் குடியிருந்த போதிலும் ஆகக் குறைந்தது நீர் மற்றும் மின்சார பயன்பாட்டிற்காக எந்தப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கல்விக் கல்லூரியிலும் ஆசிரியர் கலாசாலையிலும் 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றமையும் 04 கல்விக் கல்லூரிகள் மற்றும் 03 ஆசிரியர் கலாசாலைகளில் 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது. |

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

---------------------------------------------

| | | |
|---|---|---|
| ❖ நிதிப்பிரமாணம் 94 | 3,943,592,358 | வருடாந்த மீண்டெழும் வழங்கல் மற்றும் தொடர் வேலைகளுக்காக பிணைகளைத் தவிர்க்குமிடத்து மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பை விஞ்சி பிணைப் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| ❖ நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 | 7,382,351 | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 01 வருடம் முதல் 15 வருடங்கள் வரையிலான காலப்பகுதியின் போது 66 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட இழப்பு நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி ஆரம்பப் பரிசோதனை அறிக்கை மற்றும் பூரண அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 50,000 இற்கு மேற்பட்ட இழப்பு நட்டம் தொடர்பாக திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. |

(iii) கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை

-------------------------------------------------

| | | |
|---|---|---|
| ❖ 1961 நவம்பர் 20 ஆந் திகதிய 1961/27 ஆம் இலக்கம் மற்றும் 1964 நவம்பர் 20 ஆந் திகதிய 1964/27 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 1995 யூன் 21 ஆந் திகதிய அமைச்சுச் செயலாளரின் | - | உத்தியோகபூர்வ பதவியின் அதிகாரத்தில் அதிபர், பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருக்கவேண்டிய போதிலும் 16 தேசிய பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கத் தலைவர் பதவிக்கு அதிபர் நியமிக்கப்படாது மாணவர் சங்க அங்கத்தவர்கள் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த |

கடிதம் பாடசாலைகளுக்கிடையே அனேகமான பாடசாலைகளுக்குரிய கட்டிடங்கள் பழைய மாணவர் சங்கத்தினால் கைப்பற்றிக் கொள்வதைப் போல பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு செலவு வைக்க வேண்டிய விளம்பர அறிவித்தல் பதாதை வருமானம் அந்த மாணவர் சங்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

- 2007 திசெம்பர் 31 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை - சுற்றறிக்கை ஏற்பாடுகள் உரியவாறு அமுல்படுத்தப்படாமையினால் 200 தேசிய பாடசாலைகளில் 4,268 ஆசிரியர்களுக்கு 12 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையிலான கால இடைவெயியில் இடமாற்றம் வழங்கப்படாது ஒரு பாடசாலையிலேயே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

- 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/38 ஆம் இலக்க சுற்றறிக்கை - ஊவா மாகாணத்தின் தேசிய பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால் 2014 ஆம் ஆண்டின்போது 6 ஆந் தரம் முதல் 12 ஆந் தரம் வரை 07 தரங்களுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சின் அங்கீகாரமின்றி 75 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- 2012 நவம்பர் 23 ஆந் திகதிய 42/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை - சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி விஷேட கல்வி விடய துறைகளுக்காக ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் அந்த துறைகளில் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் விஷேட கல்விப் பிரிவற்ற 72 தேசிய பாடசாலைகளுக்கு 118 விஷேட

| | | |
|---|---|---|
| | | கல்வி பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். விஷேட கல்விப் பிரிவுடன் 40 தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட 58 பயிற்சி ஆசிரியர் சாதாரண மாணவர்களுக்கான வகுப்புகளில் படிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| ❖ 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்க சுற்றிக்கை | - | சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் புள்ளிகள் வழங்கப்பட்டமையால் முதலாந் தரத்திற்காக 32 மாணவர்கள் மாத்தறையில் இரண்டு தேசிய பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். |
| ❖ 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதியில் 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது தேசிய பாடசாலையொன்றில் ஆரம்பத் தரங்களுக்கு சமாந்தரமான வகுப்புக்களில் இருக்கவேண்டிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 ஐயும் இரண்டாம் தரங்களின் சமாந்தர வகுப்புக்களில் இருக்கவேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையான 45 ஐயும் விஞ்சி பிரபல்யமான 20 தேசிய பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 9,329 ஆகும். சுற்றறிக்கை ஏற்பாடுகள் மீறப்பட்டு பிள்ளைகளை பாடசாலைகளுக்குச் சேர்த்தமையின் காரணமாக சில பிள்ளைகள் பாதிப்படைந்திருந்தனர். |
| ❖ 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க | - | புதிய ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கும் போது |

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கை | உரிய கொள்கையொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையும் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் சுற்றறிக்கையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 193 தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற 2,248 ஆசிரியர்களின் பற்றாக்குறையும் 163 தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற 1,387 ஆசிரியர்களின் மிகையையும் இழிவு படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனிடையே அத்திகதி வரையில் மாத்தறை, வெலிகம தேசிய பாடசாலையொன்றில் உயர் தர புவியியல், பௌத்த கலாசாரம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களைக் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியரேனும் காணப்படவில்லை. |
| ❖ | 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கை - | சுற்றறிக்கையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி தேசிய பாடசாலையொன்றில் பிரதி அதிபரொருவருக்கு வாரத்திற்கு 10 பாடவேளைகளும், உதவி அதிபர்களுக்கு வாரத்திற்கு 12 பாடவேளைகளும் கற்பித்தல் செயற்பாடுகள் கையளிக்கப்பட்ட வேண்டும். இருந்த போதிலும் 64 தேசிய பாடசாலைகளில் 121 பிரதி அதிபர்களுக்கும் 28 தேசிய பாடசாலைகளில் 61 உதவி அதிபர்களுக்கும் ஒரு பாடவேளையேனும் கற்பித்தல் செயற்பாடுகள் |

| | |
|---|---|
| | கையளிக்கப்பட்டிருக்கவில்லை. 14 தேசிய பாடசாலைகளில் 20 பிரதி அதிபர்களுக்கும் 04 தேசிய பாடசாலைகளில் 06 உதவி அதிபர்களுக்கும் வாரத்திற்கு 02 முதல் 06 வரையிலான பாடவேளைகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| ❖ 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முறையே வாரமொன்றிற்கு ஆகக் குறைந்தது 40 நிமிட 35 பாடவேளைகள் கற்பித்தல் பணிகளில் ஈடுபடவேண்டிய போதிலும் 39 தேசிய பாடசாலைகளில் 160 ஆசரியர்களுக்கு ஒரு பாடவேளையேனும் கற்பித்தல் பணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 147 தேசிய பாடசாலைகளில் 1,390 ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பாடவேளை 20 இற்கும் குறைவான எண்ணிக்கையில் வழங்கப்பட்டிருந்தன. |

(ஆ) வரித் தேவைகளுடன் இணங்காமை

------------------------------------------------------------------

860 மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வு கூடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 913,161,535 தொகையும், 250 மஹிந்தோதய தொழில்நுட்ப கல்விக் கல்லூரிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 818,042,809 தொகையுமாக ரூபா 1,731,204,344 கூட்டுத்தொகையான பெறுமதி சேர்வரி செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 வழிகாட்டியின் ஏற்பாடுகளின் படி அந்த விபரங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 வெளிநாட்டுதவி செயற்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியிடலின் கீழ் 02 செயற்திட்டங்களும் நிகழ்ச்சிதிட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டுக் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் படி அவற்றின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 42,967 மில்லியனாக இருந்ததுடன் அந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6,225 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிகழ்ச்சித்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையிலிருந்து 2014 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 33.32 மில்லியன் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் அமெரிக்க டொலர் 23.7 மில்லியன் இற்குச் சமமான கட்டுநிதி மாத்திரம் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது கல்விப் பொது தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் துறை பாடத்திற்காக 250 மஹிந்தோதய தொழில்நுட்ப கல்விக் கல்லூரிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,000,000,000 தொகையான மொத்தக் கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 2,791,049,122 தொகை செலவில் 02 கல்விக் கல்லூரிகள் மாத்திரம் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய 248 கல்விக் கல்லூரிகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(iii) பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கல்விக் கல்லூரியொன்றின் நிர்மாண ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தத்தை மீறியமையின் காரணமாக உடன்படிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்த (terminate) போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணை முறிகளில் ரூபா 5,794,500 தொகையான பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கல்விக் கல்லூரிகள் நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டின் போது ஒன்றிணைந்த நிதியத்திலிருந்தும் மற்றும் ‘‘அறிவுள்ள சமூகமொன்றிற்கான கல்வி’’ செயற்திட்டத்திலிருந்தும் ரூபா 970,286,092 தொகையான செலவில் 250 கல்விக் கல்லூரிகளுக்காக தளபாடங்கள் மற்றும் உரிய தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட காலம் அந்த சொத்துக்கள் செயற்பாடற்று வைக்கப்பட்டிருந்ததுடன் உத்தரவாதச் சான்றிதழும் காலாவதியாகியிருந்தது.

(v) தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்காமல் தொழில்நுட்பத் துறை பாடங்களுக்காக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அதன் காரணமாக பாட முன்மொழிவுகளில் 15 சதவீதமான பிரயோக பயிற்சியளித்தல் வழங்க முடியாதிருந்த மாணவர்கள் 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட உயர்தர பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேண்டியேற்பட்டது. 13 பாடசாலைகளில் அந்த பாடத்திற்காக பின்பற்றுவதற்காக ஒரு மாணவரேனும் மாணவர்கள் முன்வராதிருந்ததுடன், மேலும் 20 பாடசாலைகளில் 20 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் இடையிலான இந்த பாடங்களை எடுக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 1 சதவீதத்திற்கும் 9 சதவீதத்திற்கும் இடையிலான மிகவும் குறைந்த அளவினைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு பாடத்திற்கான ஒட்டுமொத்த ஆசிரியர் பற்றாக்குறை 165 ஆக இருந்தது.

(vi) உரிய பாடசாலைகளின் நிதிஏற்பாட்டின் மூலம் கல்விக் கல்லூரிகளை நிர்மாணித்தல் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் நிபந்தனையின் கீழ் கொழும்பு மற்றும் கேகாலையில் அமைந்துள்ள இரண்டு தேசிய பாடசாலைகளுக்கு தொழில்நுட்பப் பாடத்தை கற்பிப்பதற்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 300 மாணவர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கை அனுமதிக்கப்பட்டிருந்தனர். இருந்த போதிலும் 2015 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மணங்களோ அல்லது உபகரணங்களின் கொள்வனவுகளோ மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(vii) 100 மஹிந்ததோதய தொழில்நுட்ப கல்விக் கல்லூரிகளுக்காக ரூபா 9,284,240 தொகை செலவில் சிவில் பொறியியல் உபகரணங்களையும் மின் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக உபகரண விடயங்கள் ஒவ்வொன்றிற்காகவும் கிடைத்த கேள்வியினை மதிப்பீடு செய்யாது ஒவ்வொரு தொகுதிக்கான கேள்வி கோரலின் விலைகள் எடுக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 2,550,512 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(viii) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாடு வழங்கல் மற்றும் கடப்பாடான விடயங்களில் உள்ளடங்காத நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3,845,4000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,052,000 தொகை உபசரிப்புச் செலவினங்களாக இருந்ததுடன் ரூபா 481,000 தொகை தேவையற்ற விளம்பரச் செலவினங்களாக இருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ix) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாடு வழங்கல் மற்றும் கடப்பாடான விடயங்களில் உள்ளடங்காத நடவடிக்கையான வலய ரீதியிலான 77 தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிலையங்களின் மூலம் சர்வதேச கணனி பயன்பாட்டு அனுமதிப்பத்திரம் மற்றும் சர்வதேச

தகவல் ஊடக தொழில்நுட்ப சான்றிதழ் போன்ற இரண்டு பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு பாடநெறிகளின் உள்நாட்டில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு தனியார் நிறுவனங்களில் அப்பாடநெறி இரண்டடையும் நடத்துவதற்கான பதிவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,487,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2015 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கும், பதிவின் செல்லுபடிக் காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கும் மற்றும் அந்த பாடநெறிகளை நடாத்துவதற்கான வழிகாட்டிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணனி, வன்பொருள், மென்பொருள், இணையதள வசதிகள், மனிதவள மற்றும் ஏனைய வசதிகளை வழங்காமை போன்ற விடயங்களின் காரணமாக ஒரு பாடநெறியேனும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(x) உயர்தர தொழில்நுட்ப பாட விடயத்தில் ஈடுபடுவதற்கும் முன்னுரிமை அளிப்பதற்கும் சமூகத்திற்கு வழிகாட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியேற்பாடு வழங்கல் மற்றும் கடப்பாடுகள் நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்காக வெளிப்படையான கொள்வனவு நடைமுறைகள் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 13,800,000 தொகை செலவில் 100,000 பிரதிகளை உள்ளடக்கிய புத்தகமொன்று அச்சிடப்பட்டிருந்தது. உயர்தர தொழில்நுட்ப பாட விடயத்தைக் கற்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை உற்சாகப்படுத்துவதற்குரிய போதியளவான விடயங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 100,000 புத்தகப் பிரதிகள் களஞ்சியத்திற்கு வழங்கப்படாமல் கொள்கை மற்றும் செயலாற்றல் மீளாய்வுப் பிரிவினால் கையேற்கப்பட்டதற்கான குறிப்புக்கள் இடப்பட்டிருந்த போதிலும் பகிர்ந்தளித்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித எழுத்து மூல சான்றுகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

(xi) நிகழ்ச்சித்திட்டத்தில் நிதிஏற்பாடு வழங்கல் மற்றும் கடப்பாடான விடயங்களில் உள்ளடக்கப்படாத மற்றும் விளம்பரங்கள்

மேற்கொள்ளல் அவசியமற்ற செயற்பாடான ஆசிரியர், அதிபர் புதிய சேவைப் பிரமாணங்கள் தொடர்பான ஆசிரியர்களுக்கு அறிவூட்டுவதற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,507,722 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அறிவுள்ள சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டம்

----------------------------------------------------------------------------------------

மேற்கூறப்பட்ட செயற்திட்ட நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம் மற்றும் அமைச்சின் மட்டத்தில் சகல கல்வி நிறுவனங்களிலும் மனித வளம், பௌதீக வளம் மற்றும் நிதி நடவடிக்கைகளுக்குரிய தகவல்களைப் போன்று இணையதளம் ஊடாக நேரடியாக ஆசிரியர்களின் ஆளணிக் கோவைகள் மற்றும் தொடர்பான கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், ஆசிரியர்களுக்கு தங்களது தகவல்களை பரீசித்துக் கொள்ளல், புதிய தகவல்களை உள்ளடக்குதல், இடமாற்றம் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக விண்ணப்பிப்பித்தல், அமைச்சிற்குத் தேவையான புள்ளி விபர அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை தாபிப்பதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் ரூபா 64,060,373 தொகை செலவிடப்பட்டிருந்தது. செலவினங்களில் வினைத்திறனும் செயற்திறனும் காணப்படாதிருந்தமையும், இது தொடர்பான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(ii) மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைக்கும் விழாக்களுக்கு முன் உரிய பாடசாலைகளில் அலங்கார நடவடிக்கைகளுக்காக 37 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா

10,900,000 முற்பணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதவியணியினர் பயிற்சி செலவின் விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. முற்பணத்தை தீர்ப்பதற்கான பட்டியல்கள் மற்றும் பற்றுச் சீட்டுக்களுடன் கூடிய முறையான உறுதிச்சீட்டொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1,724 பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைக் கணனி வலைப்பின்னலின் செயற்பாட்டு நடவடிக்கைகள், உபரகணங்களை வழங்குதல் மற்றும் தொலைபேசி பட்டியல்களை தீர்ப்பதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 294,347,823 தொகையும், திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 540,993,862 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. பாடசாலைக் கணனி வலைப்பின்னலுக்குரிய மாதாந்த தொலைபேசிப் பட்டியல்களை தீர்ப்பதற்கு முன், அதிக செயற்திறன் மற்றும் வினைத்திறன் தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளாமலும் பட்டியல்களுக்குரிய பாடசாலைகள் அல்லது நிறுவனங்களை இனங்காணாமலும் 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது மாத்திரம் ரூபா 813,905,729 தொகையான தொலைபேசிப் பட்டியல்கள் தீர்க்கப்பட்டிருந்தன. பாடசாலைக் கணனி வலைப்பின்னல் மந்தமடைந்தமை, அனேக சந்தர்ப்பங்களில் தொடர்பாடல் சமிக்ஞை (signal) காணப்படாமை போன்ற பல்வேறு காரணங்களினால் அனேக பாடசாலைகளில் இது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(iv) செயற்திட்டத்தின் நோக்கமான பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கான செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களிலிருந்து விலகி மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை திறந்துவைக்கும் விளம்பர அறிவித்தல்களை பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக ரூபா 1,207,133 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(v) தேவைகள் தொடர்பாக முன்னரே இனங்காணல், கொடுக்கல் வாங்கல்களுக்காக அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.4.1 வழிகாட்டியின் பிரகாரம் ஏனைய புத்தக வெளியீட்டாளர்களின் புத்தகங்கள் தொடர்பாக விசாரணை செய்யாது, 2014 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தக இருப்பொன்று ரூபா 3,891,003 செலவில் ஒரு வெளியீட்டாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக தேவையான நிதியேற்பாடு பதவியணியினர் பயிற்சி அளித்தல் செலவின விடயத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. இந்தப் புத்தகங்கள் 2014 திசெம்பர் 16 ஆந் திகதி முதல் கல்வி அமைச்சின் மத்திய களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 09 ஆந் திகதி வரையிலும் அந்தப் புத்தகங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறிவுக் கேந்திர அடிப்படையில் பாடசாலைக் கல்வி முறைமையை மீளமைக்கும் செயற்திட்டம்

---

மேற்கூறப்பட்ட செயற்திட்ட நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012, 2013 மற்றும் 2014 என்ற மூன்று ஆண்டுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாடு ரூபா 1,545,356,146 ஆக இருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த உள்ளபடியான செலவினம் ரூபா 1,248,503,649 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த மொத்த செயலாற்றலையும் அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது.

(ii) இந்த செயற்திட்டம் தொடர்பாக உலக வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் படி, பெறப்பட்ட கடனுக்காக 1.25 சதவீத வட்டியொன்று செலுத்த

வேண்டியிருந்தது. 2012 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் 2013 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையான 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ரூபா 35,954,362 தொகையும், 2013 ஏப்ரல் 10 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான வருடமொன்றிற்கு மேற்பட்ட காலத்திற்காக ரூபா 420,786,511 தொகையும், 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான ஒன்பது மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்காக ரூபா 26,714,875 தொகையுமாக வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் காசு மீதி விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் ரூபா 47,915,633 தொகையும், உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 59,775,374 தொகையுமாக ரூபா 107,691,007 கூட்டுத்தொகை செலவிடப்பட்டு மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுக்காக ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களில் 586 வகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு விடயங்களுக்காகவும் தனித்தனியாக கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 11 தொகுதிக்கு வகைப்படுத்தி கேள்வி கோரல்களை கோரி மதிப்பீடு செய்து கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 12,306,485 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் ரூபா 41,283,609 செலவிடப்பட்டு மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களிற்காக 14 வகை மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு நியதிகளின் படி ஒவ்வொரு மரத்தளபாட வகைகளுக்காக தனித்தனியாக கேள்வி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது 04 தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு கேள்வி கோரி மதிப்பீடு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 706,160 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(v) 2014 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட ஆசிரியர் பிரதிபா விருது விழாவிற்காக ஒன்று ரூபா 1,200 படி 850 நினைவுச் சின்னங்கள் ரூபா 1,165,248 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சந்தை விலை ஒப்பீட்டு முறைமையில் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பதிவேட்டின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சாதாரண சந்தையில் சமமான மாதிரிகளையுடைய நினைவுச் சின்னமொன்று ரூபா 650 தொகையில் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்தமைக்கான விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(vi) மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களிற்காக அமைக்கப்பட்ட 71 பெயர்ப் பதாதைகளை வழங்கி பொருத்துவதற்காக பெறுமதி சேர் வரியின்றி ஒன்று ரூபா 174,000 வீதம் இரண்டு வழங்குனர்களுக்கு திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 12,438,073 தொகையும் இந்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 734,840 தொகையுமாக பெறுமதி சேர் வரியுடன் மொத்தத் தொகை ரூபா 13,172,913 செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டியின் படி தேசிய போட்டியாளர் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக சந்தை விலை ஒப்பீட்டு முறைமையில் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப் பட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பதிவேடு தயாரிக்கப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த மாதிரிகளுக்குச் சமமான ஞாபகக் கல்லொன்று சந்தையில் ரூபா 129,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(vii) 2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு திட்டமிடப்பட்டதன் படி பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக ரூபா 76,479,951 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந்

திகதி வரையில் ஒரு பாடசாலைக்கு ரூபா 600,000 வீதம் 149 பாடசாலைகளுக்கு ரூபா 89,400,000 நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. மூலதனச் செலவினத் தேவை உரியவாறு இனங்காணப்பட்டு முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படாமல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி பணத்தைப் பகிர்ந்தளித்தமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 89,400,000 செலவினங்களைச் செய்ய முடியாதிருந்த போதிலும் அந்தப் பெறுமதி 2014 ஆம் ஆண்டில் அரசாங்க செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(viii) உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான மாணவர்கள் பங்குபற்றும் இயலளவை அதிகரித்தல் மற்றும் விஞ்ஞான பாடங்கள் தொடர்பான மாணவர் அடைவு மட்டத்தை உயர்வடையச் செய்யும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக 860 தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்கும், அலுவலகம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், பதவியணியினர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலத்தின் போது செயற்திட்டத்திலிருந்தும் உள்நாட்டு நிதியத்திலிருந்தும் ரூபா 11,349,316,686 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 11,279,749,122 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்களின் காரணமாக போதியளவான செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் போது கல்விப் பொதுத் தராதர சாதாரணதர விஞ்ஞான பாடத்திற்காக A அல்லது B சித்திகளைப் பெற்ற மாணவர்களின் சதவீதம் 16 ஆக இருந்த போதிலும் அது 2014 ஆம் ஆண்டின் போது 13 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

- பாட விடயங்களைப் பயிலுகின்ற ஒரு மாணவரோ அல்லது ஆசிரியரோ காணப்படாமையின் காரணமாக

திட்டமிடப்பட்டதன் படி பாட விடயங்களை ஆரம்பிப்பதற்கு 13 பாடசாலைகளுக்கு முடியாதிருந்தது.

* பாட விடயங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 140 பாடசாலைகள், 2014 ஆம் ஆண்டு வரையில் பாட விடயங்களைப் பயிலுகின்ற 12 மற்றும் 13 ஆம் தரங்களில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 866 மற்றும் 712 ஆக இருந்தது. அந்த 140 பாடசாலைகளில் இரண்டு தரங்களிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட 82 பாடசாலைகளும், மாணவர்களின் எண்ணிக்கை 11 இற்கும் 22 இற்கும் இடைப்பட்ட 58 பாடசாலைகளும் காணப்பட்டன.
* பாட விடயங்களை பயிலுகின்ற மாணவர் ஒருவர் இருந்த போதிலும் மூன்று பாடங்களுக்காகவும் ஒரு ஆசிரியரேனும் இன்றிய 08 பாடசாலைகள் உள்ளடக்கிய விஞ்ஞான பாட விடயத்திற்காக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 57 பாடசாலைகளினதும் ஒட்டுமொத்த ஆசிரியர்களின் பற்றாக்குறை 88 ஆகக் காணப்பட்டது.

(ix) பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக இந்த செயற்திட்டத்தின் மூலம் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6,062,459 தொகை நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த மூன்று ஆண்டுகளின் போதும் ரூபா 5,549,381 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலகு மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

* 2015 யூன் மாதம் வரையில் கல்வித் துறைகளில் பல்வேறு மட்டங்களில் உத்தியோகத்தர்களுக்கு

பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டல் செயலமர்வுகள் நடாத்தப்பட்ட போதிலும் அந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

* அதிபர்களிடமிருந்து உரிய பிரகாரம் செயல்முன்னேற்ற அறிக்கை பெறப்படாதிருந்ததுடன் அனேகமான அதிபர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் தொடர்பாக முழுமையான விளக்கமொன்றை பெற்றிருக்கவில்லை. மாற்று வழிகள் மற்றும் அர்ப்பணித்தலில் நலிவு, பாடசாலை காலத்தில் சகல ஆசிரியர்களையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள வசதியீனங்கள், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வளப்பங்களிப்பாளர்கள் இனங்காணப்படாமை மற்றும் தொழில்நுட்ப உபகரணத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டமை, போதியளவான பௌதீக மற்றும் நிதி வளம் காணப்படாமை போன்ற விடயங்கள் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிரியர் அபிவிருத்திக்கு உரித்தல்லாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்களினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியாதிருந்தது.

(x) அரசாங்கப் பாடசாலைகளின் பெயர்ப் பதிவேட்டில் 17,000 பிரதிகளை அச்சிடுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 10,750,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. தேவையான அளவினை விட மேலதிகமாக 3,894 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதன் கிரயம் ரூபா 2,622,100 ஆக இருந்தது.

**3.13 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்**

நீச்சல் தடாகமொன்றை நிர்மாணிக்கும் நிதியத்திற்காக கொழும்பு வலயத்தில் தேசிய பாடசாலையொன்றினால் 2007 ஆம் ஆண்டு முதல் ரூபா 15,000,000 தொகை சேகரிக்கப்பட்டு நிலையான வைப்பொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் நீச்சல் தடாக நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.14 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சினால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது.

(i) 860 மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்காக 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 8,557,156,625 தொகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 8,519,672,614 ஆக இருந்தது. அத்திகதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 822 ஆக இருந்ததுடன் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 38 ஆக இருந்தது. பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட 04 விஞ்ஞான ஆய்வுகூடங்களின் நிர்மாணம் ஒப்பந்தக்காரர்களினால் அவற்றின் வேலைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 15 வரையில் அவர்களின் ரூபா 4,901,818 தொகையான முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணைமுறிகளை பணமாக்குவதற்கும், நிறைவேற்றப்படாத வேலைகளிலிருந்து 20 சதவீதத்திற்கு

சமனான ரூபா 5,764,641 தொகையை ஒப்பந்தக் காரர்களிடமிருந்து அறவிடுவதற்கும் அமைச்சுச் தவறியிருந்தது.

(ii) குறைந்த மாணவர் எண்ணிக்கை காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு வசதிகளை வழங்கி அபிவிருத்தி செய்தல், பாடசாலைகளுக்கிடையிலான முரண்பாடுகளை இழிவுபடுத்துதல், பிரபல்யமிக்க பாடசாலைகளிலுள்ள போட்டித்தன்மையைக் குறைத்தல், பாடசாலைகளை இடைவிட்டுச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை இழிவுபடுத்துதல் மற்றும் பாடசாலைகளுக்கும் சமூகத்திற்குமிடையே உறவை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றும் புதிய 457 மாதிரிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதுல் 2011 ஆம் ஆண்டு வரையான 04 வருடங்களின் போது இந்த நிழ்ச்சித்திட்டத்தின் கீழ் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 316,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2012, 2013 மற்றும் 2014 என்ற மூன்று ஆண்டுகளுக்காக மாத்திரம் ரூபா 118,000,000 அளவில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 73,467,480 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வசதிகளைப் பெறுகின்ற 457 மாகாண சபை பாடசாலைகளுக்கான அமைச்சின் கீழ் நிதியேற்பாடு உரியவாறு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மாகாண சபையினால் அதற்கான நிதியேற்பாடு போதிளவான பிரகாரம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 457 புதிய மாதிரிப் பாடசாலைகளின் எஞ்சிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மழுங்கடிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) போதியளவான செயலாற்றல் அறிக்கை காணப்படாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 108 தேசிய

பாடசாலைகளின் மாணவர்களில் 50 சதவீதத்திற்கு குறைவான வீதத்தில் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய 79 தேசிய பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று ஆண்டுகளிலும் அல்லது இரண்டு ஆண்டுகளிலும் அல்லது சகல பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களில் சதவீதம் 10 சதவீதத்தினை விட மேற்பட்டிருந்தது.

## 3.15 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 செப்தெம்பர் 5 ஆம் திகதிய 2007/05 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 1,191,835 கூட்டுத்தொயையான காசு மீதி காணப்பட்ட பழைய 3 வங்கி நடைமுறைக் கணக்குகள், மீதியொன்று காணப்பட்டாத பழைய வங்கி நடைமுறைக் கணக்கும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மூடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 56 தேசிய பாடசாலைகளில் நிதி தேவைக்காக அமைச்சிலிருந்து பணம் கிடைக்கும்வரை அந்தப் பாடசாலைகளினால் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் 56 தேசிய பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களில் ரூபா 364,140,384 கூட்டுத்தொகையான பணம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது குணநலன் உள்ளீட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 52 தேசிய பாடசாலைகளுக்கு ரூபா 8,693,728 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா 4,492,228 தொகை எஞ்சியிருந்தது. அந்தப் பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.16 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கொழும்பு வலயத்தில் தேசிய பாடசாலை ஒன்றின் மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 2,900,000 தொகையான உள்ளக விளையாட்டரங்கொன்றை நிர்மாணப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது பழைய மாணவர்களினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பங்களிப்புடன் நிதி சேகரிக்கப்பட்டிருந்தது. 2014 யூன் 30 ஆம் திகதி வரையில் அதற்காக ரூபா 13,024,066 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில் மூன்று சந்தர்ப்பங்களின் போது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு அந்த நிர்மாண வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தன. முதல் இரண்டு ஒப்பந்தக் காரர்களினாலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டமை அல்லது அதற்கு ஏதுவான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மூன்றாவது ஒப்பந்தக்காரருக்கு மேலதிக வேலைக்காக ரூபா 2,336,859 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய அங்கீகாரமும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 13 வருட அளவிலான காலம் முதல் அத்திவாரம் போடுதல் மற்றும் கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிப்பதற்குரிய இரும்புக் கம்பிகள் வளைக்கப்படல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு அவை இயற்கைத் தாக்கங்களினால் துருப்பிடித்துக் காணப்பட்டன. மேலும் பாடசாலையின் பெற்றோர்களிடமிருந்தும் பழைய மாணவர்களிடமிருந்தும் சேகரிக்கப்பட்டு 2010 யூலை 27 ஆந் திகதி கல்வி அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்காக பாடசாலைகளினால் அனுப்பப்பட்ட ரூபா 25,600,000 இல் ரூபா 8,235,116 தொகை மாத்திரம் இந்த நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 17,364,884 தொகை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூலை 20 ஆந் திகதி வரையில் 775 கணனிக் கூடங்களுக்காக கணனி மற்றும் மடி கணனி (லெப்டொப்) உள்ளடங்கலாக ஏனைய

உபகரணங்களும் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்ததுடன் மொத்த செலவினம் ரூபா 5,618,503,996 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 செப்தெம்பர் 13 ஆம் திகதிய 13/1239/530/031-11 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, கணனிகளை ஒன்றுசேர்த்து தயாரிக்கும் உள்நாட்டு கைத்தொழிலாளருக்கும், கேள்வி சமர்ப்பிக்க முடியுமான வகையில் கணனிக் கூடங்களுக்காக தேசிய திறந்த கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டு 100 கணனிக் கூடங்களுக்காக சர்வதேச தரத்தில் கணனி மாதிரிகளில் (International Branded) கணனி, லெப்டொப் மற்றும் பிரிண்டர் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தது. வழங்குனருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் தொடர்பாக உரிய பிரகாரம் மதிப்பீடு செய்யாமல், சர்வதேச தரத்தில் கணனி மாதிரிகளில் (International Branded) இல்லாத கணனிகள் மற்றும் லெப்டொப் என்பவற்றை உள்ளடக்கிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2014 ஆம் ஆண்டில் மூன்று சந்தர்ப்பங்களின் போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அந்த வழங்குனரிடமிருந்தே மேலும் 665 கணனிக் கூடங்களுக்காக கணனிகள் மற்றும் லெப்டொப்களை உள்ளடக்கிய ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவைகளும் சர்வதேச தரத்திலான வியாபாரக்குறி (International Branded) இல்லாத கணனிகளும் லெப்டொப்களுமாக இருந்தன.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது திறந்த கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி அறிவு கேந்திர நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கல்வி முறைமையினை மீளமைக்கும் செயற்திட்ட நிதியத்தில் இருந்து ரூபா 277,239,376 செலவில் சர்வதேச தரத்திலுள்ள கணனிகள், லெப்டொப், பிரிண்டர் மற்றும் ஏனைய உபகரணங்கள் 40 கணனிக் கூடங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு

கணனிக் கூடத்திற்காக ரூபா 6,930,984 அளவில் செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பிரகாரம் 775 கணனிக் கூடங்களுக்காக சர்வதேச தரத்திலுள்ள கணனி மாதிரிகளில் இல்லாத கணனிகள் மற்றும் உபகரணங்களுக்காக கணனிக் கூடமொன்றிற்காக ரூபா 7,271,171 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) 2015 யூலை 20 ஆந் திகதி வகையில் 775 கணனிக் கூடங்களுக்கு கணனிகள், லெப்டொப் பிரிண்டர் மற்றும் உரிய ஏனைய உபகரணங்கள் வழங்கி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அத்திகதி வரையில் 345 கணனிக் கூடங்கள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமையும், மின்சார வழங்கலில் தாமதம் மற்றும் ஆய்வுகூடங்களை மாணவர் உரித்தாக்குதல் நியமித்தல் தாமதத்தின் காரணமாக எஞ்சிய கணனிக்கூடங்களை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

**3.17 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறைமையானதாகக் காணப்படவில்லை. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தை திறந்து வைத்தல் மற்றும் மஹிந்தோதய தொழில்நுட்ப கல்விப் பீடங்களுக்காக அடிக்கல் நாட்டும் விழாவிற்கான விளம்பரச் செலவினம் மற்றும் ஏனைய விளம்பரச் செலவினங்களுக்காக ரூபா 10,046,188 தொகை 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2,529,462 தெகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த விழாக்களுக்குத் தேவையான உபகரணங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு

முரணாக மேலும் ரூபா 1,100,000 செலவிடப்பட்டிருந்தது. விளம்பரச் செலவினங்களுக்கான செலவின விடயத்திற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் அந்த மொத்தச் செலவினமான ரூபா 11,146,188 தெகையானது இரண்டு மூலதன செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2014 இன் வருடாந்த பாதீட்டுப் பிரேரணையான பிரிவெனாக்களின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 300,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் பிரிவெனாக்களின் மூன்று வருட திட்டத்தை அமுல்படுத்தும் தேசிய நிகழ்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 4,584,051 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த விழாவை நடாத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ஆக்கபூர்வமான செலவினமாக இருக்கவில்லை.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது 86 தேசிய பாடசாலைகளில் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 42,488 ஆக இருந்ததுடன் அதில் 15,790 மாணவர்களிடமிருந்தும் ரூபா 5,667,900 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் வெளி விளையாட்டு பயிற்றுவிப்பாளருக்கு ரூபா 49,870,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு வலயத்தில் தேசிய பாடசாலையொன்றினால் 2013 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சியொன்றிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் ரூபா 10,501,717 தொகையாகவும் மொத்தச் செலவினம் ரூபா 10,501,717 ஆகவும் இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* நினைவுச் சின்ன வருமானம் ரூபா 7,987,500 ஆக இருந்ததுடன் ஞாபகார்த்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட 1,296 விளம்பரங்களில் 367 விளம்பரங்களில் மாணவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஞாபகார்த்த சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக சகல மாணவர்களும் ஒரு விளம்பரமாவது வழங்க வேண்டுமென்று நிபந்தனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

* ஞாபகார்த்த சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கும், உரிய விளம்பரங்களுடன் பாடசாலைக்கு வழங்கப்பட்ட மாதிரிப் பத்திரங்களை சேகரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் ஞாபகார்த்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களுக்காக மாத்திரம் பணம் வழங்கப்பட்டதா அல்லது கிடைக்கவில்லையா என பரீட்சிக்க வேண்டியிருந்தது. அதன்படி பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் ஞாபகார்த்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படாது பணம் வேறு பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சந்தர்ப்பம் இல்லாதிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

* 2015 யூலை 13 ஆந் திகதி வரையிலும் 148 விளம்பரங்களுக்கான நிலுவை வருமானம் ரூபா 933,000 ஆக இருந்ததுடன் சில பாடசாலை ஆசிரியர்களினாலும் பெற்றோர்கள் சிலரினாலும் வேறு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு கணக்காய்வின் பின்னர் கையளிக்கப்பட்ட தொகை ரூபா 205,500 ஆக இருந்தது.

* கலை விழாவிற்காக அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டு வருமானம் ரூபா 1,524,250 ஆக இருந்த போதிலும் 2015 யூலை 13 ஆந் திகதி வரையிலும் நிலுவை நுழைவுச்சீட்டு வருமானம் ரூபா 286,033 ஆக இருந்தது.

* கலை விழாவிற்காக 03 சந்தர்ப்பங்களின் போது சேவைகளைப் பெற்றுக்கொண்டு ரூபா 347,500 தொகை

செலவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய தேவைகளுக்காக 07 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்து ரூபா 662,950 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பாட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2006 நவம்பர் 22 ஆந் திகதிய அமப/06/2125/206/072 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி கல்வி அமைச்சின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வையின் கீழ் அரச பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு முப்படைகள் மற்றும் பொலிஸ் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்வியினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கொழும்பு பாதுகாப்பு சேவைக் கல்லூரி 2007 சனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* கல்லூரியினை நடாத்திச் செல்வதற்குத் தேவையான சட்டரீதியான மாதிரியொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* கல்வி அமைச்சினால் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் 116 அங்கத்தவர்கள் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டிருக்கும் போது அரச பாதுகாப்பு அமைச்சினால் பாதுகாப்புப் பிரிவின் 73 உத்தியோகத்தர்கள் பாடசாலையின் பல்வேறு பதவிகளுக்காக இணைக்கப்பட்டிருந்தனர். இந்த அமைச்சினால் நியமிக்கப்பட்ட முகாமைத்து சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் முடிவுகள் பாடசாலையில் அமுல்படுத்தப்பட்டிருந்தமையாலும், கல்வி அமைச்சின் அங்கீகாரமின்றி ஏனைய எந்த ஒரு அதிகாரமும் இல்லாமல் ஒரு மாணவரிடமிருந்து மாதமொன்றிற்கு ரூபா

1,200 தொகையான அறவிடல்களும், பாடசாலை சிற்றுண்டிச்சாலை, புத்தகசாலை, ஆடையகம் மற்றும் நீச்சல் தடாகங்களிலிருந்து வருமானம் அறவிடப்பட்டு உழைக்கப்பட்ட பணம் பாதுகாப்பு சேவைக் கல்லூரி என்ற பெயரிலுள்ள வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்காக ஏற்படுகின்ற செலவினம் அந்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி பாதுகாப்பு பிரிவினால் பாடசாலையில் நிருவாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளில் முன்னின்றமை அவதானிக்கப்பட்டது.

* சீருடையுடனும் மற்றும் சிவில் ஆடைகளுடனும் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் பாடசாலை நேரங்களிலும் அதன் பின்னரும் பாடசாலையின் சுற்றாடலில் நடமாடுதல் பாடசாலையில் காணப்பட வேண்டிய சிறந்த நிலைக்கு பொருந்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த பாடசாலை சூழலில் பிள்ளைகளின் பாதுகாப்பு, ஒழுக்கம் மற்றும் நல்லாளுகை தொடர்பாக அதிபர்களை உள்ளடக்கி கல்விசார் பதவியணியினர்களுக்குரிய பொறுப்புக்களை நேரடியாக அவர்களுக்குக் கையளித்தல் தொடர்பில் கேள்விக்குரிய நிலைமையும் காணப்பட்டது.

* கல்வி பயிலுகின்ற சகல மாணவ மாணவிகள் பாதுகாப்பு பிரிவுகளுக்குரிய குடும்பங்களின் பிள்ளைகளாக மாத்திரம் இருப்பதால் பல்வேறு சமூக மற்றும் கலாசாரங்களுடன் மாணவர்களுடன் கூட்டிணைந்து கல்வி பெறும் வாய்ப்பு இழக்கப்பட்டதில் கல்வியில் அடைவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நல்ல பண்புள்ள பிரஜையாக உருவாக்க முடியுமாக இருந்தமை, ஒரு சமூக வகுப்பின் நோக்கமாகக் கொண்டு இவ்வாறான விசேட பாடசாலைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக மற்றைய சமூக வகுப்பிற்காக அசாதாரணமொன்று ஏற்படுவதன் மூலம் சர்ச்சைக்குரிய நிலைமையொன்று எழக்கூடியதாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

**3.18 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து உள்ளகக் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையில் வேலைகளைப் பகிர்ந்து பொறுப்புக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது மற்றும் கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற அச்சுறுத்தல் மேற்கொண்டு காசோலைகளில் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து, தங்களது ஆரம்ப நியமனம் முதல் 28 வருடங்களில் பாடசாலையின் பல்வேறு பதவிகளில் சேவையாற்றி தற்போது பதில் கடமை அதிபராக கடமையாற்றுகின்ற கம்பளை வலயத்தின் தேசிய பாடசாலையொன்றின் அதிபரினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,711,160 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 205,080 தொகை வேறு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பஸ்யால சிறிசங்கபோ விஷேட சிறுவர் பாடசாலையொன்று கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்துள்ள பாடசாலையாக மாற்றுவதற்காக பாடசாலை முகாமையினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விண்ணப்பம் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பம் முதல் உரிய உத்தியோகத்தர்களினால் முறையற்ற வகையில் நடவடிக்கை எடுத்து பதிவினை தாமதித்திருந்த போதிலும் பதிவு செய்தல் நிராகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனிடையே பதிவினை மேற்கொள்வதற்காக பாடசாலை முகாமையாளரிடமிருந்து ரூபா 1,000,000 தொகை இலஞ்சமாக பெற்றுக் கொள்வதற்கு வெளித்தரப்பினரால் முயற்சி எடுக்கப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**3.19 நட்டமும் இழப்பும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 67 தேசிய பாடசாலைகளில் உடன்படிக்கையின் படி அறவிடப்படாதிருந்த சிற்றுண்டிச்சாலை நிலுவை வருமானம் ரூபா 4,386,773 ஆக இருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 03 தேசிய பாடசாலைகளில் அறவிடப்படாதிருந்த கேட்போர் கூட நிலுவை வாடகை வருமானம் ரூபா 26,500 ஆகும்.

**3.20 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தங்களது பாடசாலைகளில் அல்லது அண்மையிலுள்ள சகோதர பாடசாலைகளில் அல்லது போதியளவான கேட்போர் கூடம் அல்லது மண்டப வசதிகள் காணப்படும் போது 20 தேசிய பாடசாலைகளில் பல்வேறு விழாக்களுக்காக தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான கலையரங்குகள் அல்லது மண்டப வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 9,299,125 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.21 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சீர்செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் | |
|---|---|---|---|
| **வருடம்** | **பந்தி இலக்கம்** | | |
| 2013 | 1.5 (அ) (i) | அமைச்சரவைத் | தீர்மானத்தின்படி |

| | |
|---|---|
| | வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 42 இனை விஞ்சி, மாணவர்களை அனுமதிக்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மாத்தறை ராகுல வித்தியாலயத்திற்கு 35 மாணவர்கள் சேர்க்கப்பட்டதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த முறைப்பாட்டை பரிசோதனை செய்வதற்குரிய தகவல்கள் மற்றும் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2013 1.5 (ஈ) மற்றும் (உ) | எரிபொருள் எல்லையினை விஞ்சி முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டின் போதும் உத்தியோகபூர்வ வாகனமொன்றிற்கும் 02 பாதுகாப்பு வாகனங்களுக்கும் ரூபா 2,399,914 கூட்டுத்தொகையான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டின் போதும் அமைச்சின் பதவியணியில் 08 உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட 08 வாகனங்களுக்காக வழங்கப்பட்ட எரிபொருள் ரூபா 1,676,232 தொகை குறிப்பிட்ட பிரகாரம் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டிருக்கும் போது அதற்கு மேலதிகமாக விநியோகிக்கப்பட்ட எரிபொருள் பெறுமதி ரூபா 1,230,871 ஆகும். |

## 3.22 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பதிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐந்தாம் தர புலமைப் பரிசில் பெறுனர்களுக்கு மாணவர் உதவி கொடுப்பனவு தொடர்பான கல்வி அமைச்சுச் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியில்

காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 97 ஒட்டு மொத்த வலயக் கல்வி அலுவலகங்களில் 50 வலயக் கல்வி அலுவலகங்களில் தெரிவுப் பரிசோதனை செய்யப்பட்டது. 2006 யூன் 20 ஆந் திகதிய 2006/27 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் சுற்றறிக்கையில் 8.2 ஆம் பந்திக்கு இணங்காமல் 119 தேசிய பாடசாலைக்குரிய 24,506 மொத்த புலமைப் பரிசில் பெறுனர்களுக்கு ரூபா 52,956,000 தொகையும், உரிய பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக 29 தேசிய பாடசாலைக்குரிய 1,813 மொத்த புலமைப் பரிசில் பெறுனர்களுக்கு ரூபா 4,526,500 தொகையும் ஆக ரூபா 57,482,500 மாணவர் உதவி தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கல்வி அமைச்சினால் நிதியேற்பாடு வழங்கப்பட்டமையின் காரணமாக அந்த புலமைப்பரில் பெறுனர்களுக்கு இந்த மாணவர் உதவு தொகையை செலுத்த முடியாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மாணவர்களின் சராசரி வருகை உள்ளடக்கப்பட்ட வருடாந்த அறிக்கை உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்டு பெற்றுக்கொள்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படாமை, உரிய பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போதியளவான நிதியேற்பாடு செய்யப்படாமை போன்றவை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முறையான, ஒழுங்கு முறையான மற்றும் சாதாரணமாக மானியம் மற்றும் உதவிப் பணமும் பகிர்ந்தளிக்கப்படும் வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக 2006 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அமப/06/1465/229/083 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 1980 இன் 1 அம் இலக்க பிரிவெனாக் கல்வி கட்டளைக் கோவையின் 11 ஆம் பட்டோலையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சகல பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களுக்கும் செலுத்த வேண்டியிருந்த மாணவர் உதவு தொகை மற்றும் நூலக உதவிகள் உரிய பிரகாரம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையாக இருந்த தொகை ரூபா 3,018,700 ஆக இருந்தது.

(இ) 42 தேசிய பாடசாலைகளில் 788 ஆசிரியர்களுக்கு 2,240 சந்தர்ப்பங்களில் நூலகப் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதும் அந்தப் புத்தகங்கள் தாமதமாக மீளக் கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த

போதிலும் அதற்காக ஏற்பட்ட தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 54 தேசிய பாடசாலைகளில் 383 ஆசிரியர்களுக்கு இடமாற்றம், வெளி நாடு செல்லல், ஓய்வு பெறல் மற்றும் சேவையிலிருந்து விலகுதல் போன்ற சந்தர்ப்பங்களின் போது மீளக் கையளிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 1,033 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 156,834 ஆக இருந்தது. அந்தப் புத்தகங்கள் அல்லது அவற்றின் பெறுமதி மீளப் பெறப்படாமல் அந்த ஆசிரியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(உ) 54 தேசிய பாடசாலைகளில் இரண்டாம் மொழியாக தமிழ் அல்லது சிங்களம் கற்பிப்பதற்காக போதியளவான ஆசிரியர்கள் நியமிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக 76 வெளி ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் சம்பளமாக ரூபா 10,619,307 தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் போதும் அதற்கு முன்னைய காலத்திற்காகவும் 149 தேசிய பாடசாலைகளில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணிகளில் 4,732 அங்கத்தவர்கள் வழக்கமாக தாமதித்து சேவைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன் அதில் கல்விசார் பதவியணியினரின் 4,123 அங்கத்தவர்களின் தாமதம், ஆரம்ப பாட வேளையைக் கற்பிப்பதில் நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(எ) 15 தேசிய பாடசாலைகளில் 29 ஆசிரியர்களுக்கு அவர்கள் நியமனம் வழங்கப்பட்ட பாடங்களுக்கு பறம்பான பாடங்களை கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். விஷேடமாக 04 தேசிய பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர் பயிற்சி பெறாத 06 ஆசிரியர்களுக்கு ஆரம்ப வகுப்புக்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஏ) 6 ஆந் தரம் முதல் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) வரையான தரங்களுக்குரிய பாடங்களான சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் செய்மதி அலை வரிசையின் ஒலிபரப்பிற்காக 1962 பாடசாலைகளுக்கு வசதிகள்

வழங்கப்பட்டிருந்தன. இதற்காக டயலொக் நிறுவனத்தினால் ரூபா 10,300,020 தொகை செலவில் 2005 தொலைக்காட்சி இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* பாட நேர சூசியில் இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பாட வேளையில் உள்ளடக்குதல் நடைமுறையில் செய்யமுடியாதிருந்தமை மற்றும் சமாந்தர வகுப்புக்களில் சகல மாணவர்களுக்கும் போதியளவான இட வசதிகள் கிடைக்காமையினால் பாடசாலையில் பாடங்களை கற்பிப்பதற்கு முடியாதிருந்தது. பாட சிபார்சின் படி தவணைக்குரிய கற்பித்தல்கள் உரிய பாட பிரிவுகளுடன் இணையாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒளிப்பரப்பப்படுகின்ற பாடம் தயாரிக்கப்படாமையின் காரணமாக பாட கைநூல் பயன்பாடின்றி குறைவடைந்திருந்தது.

* சில பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட தொலைக்காட்சி இயந்திரங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு அன்டனா தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

* தொலைக்காட்சி இயந்திரம் பாதுகாப்பான இடத்தில் களஞ்சியப்படுத்தாமையினால் மழை நீரில் நனைந்து ரூபா 150,732 பெறுதிமதியான 3 இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் அழிவடைந்திருந்தது.

* ரூபா 200,976 பெறுமதியான 04 தொலைக்காட்சி இயந்திரங்கள் காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாக போதியளவான சட்ட ஏற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.23 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 2,565 | 1,189 | 1,408 | 32 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,554 | 1,488 | 70 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 34,281 | 38,903 | 332 | 4,954 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,152 | 4,727 | 327 | 3,902 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக ஒப்பந்த/ அடிப்படை) | 242 | 522 | 106 | 386 |
| | மொத்தம் | 39,794 | 46,829 | 2,243 | 9,278 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வெற்றிடங்கள் 2,243 இனை நிரப்புவதற்கும், 9,278 மிகைக்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 7 ஆசிரியர் கல்லூரிகள், 106 ஆசிரியர் நிலையங்கள் மற்றும் 16 தேசிய கல்விக் கல்லூரிகள் என்பவற்றின் விரிவுரையாளர்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 164 ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 75 தேசிய பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது விடுதி நிதியத்திலிருந்து அல்லது வசதிகள் மற்றும் சேவைக் கட்டண கணக்கிலிருந்து அல்லது சம்பளம் செலுத்தி சேர்க்கப்பட்ட கல்விசாரா பதவியணி அங்கத்தவர்களின் எண்ணிக்கை 341 ஆகும். அவர்களுக்கு 2014 ஆம்

ஆண்டின் போது மாத்திரம் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 39,792,408 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. தலைப்பு 212- பரீட்சைகள் திணைக்களம்

### 4.1 வருமானக் கணக்கு

20.03.02.13 ஆம் பரீட்சைகள் மற்றும் ஏனைய கட்டண வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 4,592,907 தொகையான வருமானப் பெறுவனவு மற்றும் ரூபா 4,477,731 தொகையான வருமானங்கள் மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உறுதிப்படுத்தல்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் உரிய நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

21201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,618,008 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளில் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால இடைவெளி கடந்திருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) | 24,313,203 | வருடாந்தம் மீண்டெழும் வழங்கல் மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்கான கடப்பாடுகளை தவிர்க்கும் போது, மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 115(3)(அ) | 575,075 | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகாரமின்றி பட்டியல் திகதி முதல் வேலை செய்கின்ற 68 இற்கும் 88 நாட்களுக்கும் இடையிலான காலாதாமதத்துடன் பணம் பின்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

**4.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

பரீட்சைகள் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 4,162,619 கூட்டுத்தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 66 | 19 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 06 | 12 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 419 | 306 | 113 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 164 | 175 | - | 11 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக ஒப்பந்த/ அடிப்படை) | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 686 | 563 | 144 | 21 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 144 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. தலைப்பு – 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

### 5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் படி இழப்பு தொடர்பான பதிவேடும் நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதியும் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய (காணி வைப்பு தவிர) ரூபா 4,790,800 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

21301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,171,190 ஆக இருந்ததுடன் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால இடைவெளியிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**5.4 வணிக முற்பணக் கணக்கு**

---

21302 ஆம் விடய இலக்க வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் புத்தகங்களை அச்சிடுவதற்காக 05 அச்சீட்டார்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,521,000 தொகை கடன் கொடுத்தோராக கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்குரித்தல்லாத, செலுத்தி விடுவிக்கப்பட்ட ரூபா 2,586,550 தொகையான கடன்கொடுத்தோர் மீதியொன்று கடன் கொடுத்தோர் கணக்கின் கீழ் குறிப்பிடப்படாமையினால் அந்த அளவினால் பொறுப்புகள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்கின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 14,495,000 ஆக இருந்ததுடன் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 7,280,000 ஆனமையால் ரூபா 7,215,000 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) யாழ்ப்பாணம் விற்பனை நிலையத்தில் 2014 மார்ச் மாதத்தின் போது ரூபா 87,680 தொகையான விற்பனை வருமானம் 2014 யூன் மாதத்தின் பெறுவனவு வகைப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இது விற்பனைக் கணக்கில் உள்ளக்கப்படாமையினால் அந்த அளவினால் இலாபம் குறைவாக இருந்தது.

(உ) தளபாடமும் பொருத்திகளும் கணக்கில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,296,143 பெறுமதியான தளபாடங்கள் திரட்டு நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் கணக்கில் காண்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 1,396,143 ஆக இருந்தது. இதனால் தளபாடமும் பொருத்திகளும் ரூபா 100,000 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் சிறிய உபகரணங்களுக்காக முற்பண செயற்பாடுகளின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் படி பெறுமானத்தேய்வு அளவு ரூபா 209,610 ஆக இருந்த போதிலும், கணக்கில் இலாபத்திற்கு எதிராக ரூபா 62,883 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இலாபம் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 146,727 இனால் அதிகரித்திருந்தது.

## 5.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|

| | | ரூபா | |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94 | 296,269 | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 115 | 85,025,578 | அமைச்சுச் செயலாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரின் அங்கீகாரம் பெறப்படாது முன்னைய ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | நிதிப்பிரமாணம் 187 | 124,312 | நாளாந்த விற்பனை வருமானம் இயலுமான வரை உடனடியாக வங்கியிலிடப்பட்டிருக்கவில்லை. |

## 5.6 போலியான சொத்துக்கள்

பாடசாலைகளுக்காக பகிர்ந்தளிக்கப்படுகின்ற புத்தகங்களின் பெறுமதி அந்தந்த வருடங்களின் முற்பணக் கணக்கில் கொடுப்பனவாக பதிவதற்குப் பதிலாக கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோராக ரூபா 9,662,075,549 தொகையான திரண்ட மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

## 5.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 45 | 38 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 104 | 65 | 39 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 71 | 171 | - | 100 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக ஒப்பந்த/ அடிப்படை) | - | 27 | - | 27 |
| | மொத்தம் | 224 | 303 | 48 | 127 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 48 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை

### 6.2 கலைத்தல் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 சனவரி 11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை கலைக்கப்பட்டு அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் கையளிக்கப்படாமல் 2012 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் அதன் செயற்பாடுகள் தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கையளித்தலின் பின்னர் சபைக்குச் சொந்தமாக இருந்த ரூபா 5,046,870

பெறுமதியான சகல புத்தகங்களும் பாடசாலைக்கு நன்கொடையளிக்கப்பட்டு சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த கல்வி அமைச்சின் பதவியணியினருக்காக இடமாற்றம் வழங்கப்பட்டு ரூபா 9,834,534 தொகையான சபையின் இறுதியாக எஞ்சிய பண மீதி 2012 யூலை 25 ஆந் திகதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 17,085,337 தொகையான எஞ்சிய சொத்துக்களும் பொறுப்புக்களும் தீர்த்து வைக்கப்படாமல் 2012 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2012 திசெம்பர் 20 ஆந் திகதிய கணக்காய்வு ஐய வினாவின் பின்னர் 2013 யூன் 11 ஆந் திகதி கலைத்தல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக மூன்று சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டு இறுதியாகத் திருத்திய கலைத்தல் கணக்குக் கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்குகளின் மீதியில் ரூபா 4,124,410 தொகையான பின்வரும் விபரங்களையுடைய நடைமுறைச் சொத்துக்கள் சபையின் உரிமை மீதிகளில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) புத்தக இருப்புக் கணக்கின் மீதியின் படி ரூபா 3,958,405 தொகையான புத்தகங்கள் பௌதீக ரீதியில் காணப்படவில்லை. புத்தக இருப்பு தொடர்பான பௌதீக பரிசோதனையொன்று எந்த சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்படாமை, புத்தகக் களஞ்சியம் இயற்கை மற்றும் கிருமிகளின் அரிப்பிற்கு உட்படுவதற்கு இடமளிக்கப்பட்டமை, புத்தகப் இருப்புப் பதிவேடு முறையாக பராமரிக்கப்படாமை, முறையான களஞ்சிய நடைமுறை பின்பற்றப்படாமை, புத்தக இருப்பு கணக்கீடு செய்வதில் பிழையான வைத்தல்கள் மற்றும் அது தொடர்பாக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் சுட்டிக்

காண்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த புத்தக இருப்புக் கணக்கின் மீதி உருவாகியிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியின் போது மேலும் ரூபா 307,380 பெறுமதியான புத்தக இருப்பு மீதியையொன்றும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ii) சிறுவர் அரிச்சுவடி மற்றும் வீர சோலியம் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக இரண்டு வெளித்தரப்பினர்களுக்கு ரூபா 166,005 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிலுவையாக இருந்த இரண்டு முற்பண மீதிகளும் பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது சபையினால் ரூபா 1,378,993 தொகை செலுத்தி ரூபா 1,231,244 பெறுமதி அளவிலான தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 147,749 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் சபையை மூடும் போது ரூபா 1,231,244 பெறுமதியான தளபாட உபகரணங்கள் கல்வி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டு ரூபா 1,378,993 தொகையான அலுவலக தளபாட உபகரணக் கணக்கு மீதி ரூபா 147,749 தீர்க்கப்படாமல் மூடப்பட்டமை தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.